தமிழகம்

சிறப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] சுபகிருது பங்குனி 5 18—3—63 வார இதழ் விலை – 10 காசுகள். [இதழ் 17

வாழ்க்கையை அகத்தாலும் புறத்தாலும் வளப்படுத்துவதே கல்வி

சிதம்பரம் இராமநாதன் செட்டியார் நகர உயர்நிலைப்பள்ளி மாணவர் கலைபயில் மன்றத் திருவள்ளுவர் விழா திரு. புர. சுவாமிநாதன் தலைமையில் 7...3...63ல் நடைபெற்றது. அவ்வமயம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றி இன்றும் வழக்கில் உள்ளது - போற்றிப் பாராட்டப் பெறுகிறது என்பது திருக்குறளுக்குரிய சிறப்பாகும். இந்நூல் உண்மையிலேயே சிறப்புடையதா? அல்லது, காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்ற பழமொழியின் படி நாம் அதைச் சிறப்பிக்கிறோமா என்பதை ஆராய வேண்டும்.

திருக்குறளின் கருத்து கால எல்லைக்கு உட்பட்டதல்ல. காலங்கடந்த தத்துவங்களையுடையது அந்நூல். திருக்குறள் சாதி, இன, மொழி, நாடு வரையறைகளைக் கடந்து உலகம் தழிஇய பொது நூல். அது மனித குலத்தின் நீதிநூல்.

வள்ளுவத்தில் அதிசயங்கள் அற்புதங்கள் கிடையாது. அன்று வள்ளுவர் சொன்னதை நாம் இன்று கையாள முடியவில்லை யென்றால், அது நூலின் பிழையன்று; நாம் மனிதத் தன்மையிலிருந்து மனிதப் பண்பிலிருந்து நெடுதூரம் விலகிச்சென்றிருப்பதே காரணமாகும். கல்விக்கும் வாழ்க்கைக்கும் இன்றுள்ள உறவு அ[illegible]சைககும் அப்துல்கா[illegible]க்கு[illegible] உள்ள உறவை[illegible]பால்இருக்கிறது. நமது வா[illegible]க்கைப் போக்கில் வள்ளுவத்தின் நிழல் படியவில்லை.

மனிதர்களின் வாழ்க்கையை அகத்தாலும் புறத்தாலும் வளப்படுத்துவதே கல்வி. சராசரி மனிதனால் நடைபயிலக் கூடிய அறநெறியே கூறினார் அவர். வாழ்க்கை முறைபற்றிச் சமுதாயத்தின் சாதாரணபடியில் உள்ள சராசரி மனிதனுக்குச் சொல்ல விரும்பியே அளவில் சுருக்கமாக — தனித்தனியே எளிய முறையில் கூறினார்.

வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களையும் அவர் பேசுகின்றார். அனைத்தும் அனுபவித்த ஒருவர் கூறுவது போலவே பேசு

திருக்குறள் வாழ்க்கையின் அனுபவ விளக்கம்

கிறார். திருக்குறளே அனுப விளக்கமாகக் காட்சியளிக்கிறது. திருவள்ளுவர் சமுதாயத்தின் பல்வேறிடங்கட்கும் சென்று பல்வேறுதரப்பினரையும் பார்த்து - நாட்டில் பலர் பேசிய—வழக்கில் இருந்த பல்வேறு செய்திகளையும் கருத்துக்களையும் கூட நினைவில் வைத்துக் கொண்டு நூல் செய்திருக்கிறார். மிகச் சிறந்த பொற்கொல்லர்போல, வள்ளுவர் சொற்களுக்கு மெருகேற்றியிருக்கிறார். அவர் ஒரு கைவந்த சொல்தச்சராகவே விளங்குகிறார்.

இன்று, அள்ளித் தெளித்ததெல்லாம் கோலம் என்பது போல பலர் வாழ்க்கை நடத்துகின்றனர். வரலாற்றைப் படிப்பதிலே நாம் அவ்வளவு அக்கறை காட்ட வேண்டியதில்லை. நாம் ஒரு புதிய வரலாற்றை உருவாக்க முயற்சிக்க வேண்டும். நமக்கு முன் வாழ்ந்தவர்கள் செய்த தவறுகளை நாமும் செய்து வீழ்ச்சியடையக் கூடாது.

தொடக்கத்தில் மனிதன் கண்களால் தான் பேசியிருக்கிறான். உள்உணர்வுகளுக்குத் தக்கபடி கண் ஆடும். மனிதன் கண்களைக் கட்டுப்படுத்தி வாழ முடியாது. இதனால்தான், இறைத்தோற்றத்தில் கூட அப்பரடிகள் முதன்முதலில் குனித்த புருவத்தைப் பற்றிப் பேசுகிறார்.

வள்ளுவர் காலத்தில் நம் மக்களில் பலர் எண்ண—சிந்திக்க விரும்பாமலேயே வாழ்ந்தார்கள். எனவே வள்ளுவர், எண்ண வேண்டும்—சிந்திக்க வேண்டும் என்று வற்புறுத்தினார், எண்ணிச் சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் உலகத்தை வெற்றிபெற முடியும்.

(4-ம் பக்கம் பார்க்க)

அப்பர் அளிக்கும் விருந்து

எள்ளிநகைப்பான் எம்பெருமான்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அன்பிலே கரைந்து இறைவனை நினைந்து நினைந்து நெகிழ்பவர் நெஞ்சகத்தினுள்ளே இறைவன் புகுந்துநிற்கும் இயல்பினன் வையகத்திற்கு வரும் இடுக்கண்களைத் தாம் தாங்கிக் காப்பாற்றும் பொன்னிறச் சடையன்; புண்ணியன் எனினும், பொய்மையுடையவரின் பூவும் நீரும் கண்டு அவர்களை அணுக நாணி எட்டி நின்று அவர்தம் செயல்கண்டு எள்ளி நகைத்து நிற்பான் இதனை அப்பரடிகள் கூறுவதைப் பாருங்கள்:

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுகளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப்
புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும்நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே"

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும் அருள்நெறியைப் பரப்புவதே எங்கள் நோக்கம்

மலர்3] 18-3-63 [இதழ் 17

வேண்டாம் இந்த விபரீதம்

தலைவர் பெரியார் அவர்கள் பிரிவினைத் தடைச்சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வேன் என்றும், அதற்கு உதவியாக மாநாடு கூட்டுவேன் என்றும் அறிவித்திருக்கிறார். இன்றைய உலகச் சூழ்நிலையில் இந்தியாவின் ஒற்றுமையே அதற்குரிய மிகப் பெரிய பலம்; காலத்தால் மூத்த நாகரிகம் படைத்த மக்கள் வாழ்கின்ற நாடாக இருந்தும் நாம், அமெரிக்காவைப் போலவும், ரஷ்யாவைப் போலவும் வளர்ச்சி யடையாமல் தேங்கி நின்றமைக்குக் காரணம், இந்த நாட்டில் நிலவிய பிளவுகளும் பிரிவினை யுணர்ச்சிகளுமேயாம். இந்தியநாடு சுதந்திரம் பெற்றபிறகு, இந்திய அரசியல் சாசனத்தின் முன்னால், இந்திய மக்கள் அனைவரும், சாதி இன, மொழி, மதவேறுபாடின்றி ஒரு குடும்பமாக ஆக்கப் பெற்றுள்ளனர். உணர்ச்சி வழிப்பட்ட அனுபவரீதியான இந்திய தேசீய ஒருமைப்பாடு செழித்து வளர்ந்து வருகிறது. இந்த நிலைமையில், இந்தியாவைப் பிரிக்கவேண்டும் என்று கேட்பது, இல்லை கருதுவதுகூட நாட்டுக்கு உகந்ததல்ல. பிரிவினை உணர்ச்சிகளைத் தூண்டுவதின் மூலம் இந்தியாவின் வலிமையைக் குறைத்து சுதந்திரத்திற்கு ஆபத்தை உண்டாக்குவது கொஞ்சமும் விரும்பத்தக்கதல்ல. இந்தத் தவறை யார் செய்தாலும் குற்றம் குற்றமேயாகும். பிரிவினை எண்ணத்தை விட்டுவிட்டு, தேசீய இனங்களின் பாதுகாப்புக்குரிய முயற்சிகளில் ஜனநாயக ரீதியாகச் செயல் படுவது தேசீய இனத்திற்கும் நல்லது—நாட்டுக்கும் நல்லது. ஆதலால், தலைவர் பெரியார் அவர்கள் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டு, தேசீய இனத்தின் பாதுகாப்புக்குரிய முயற்சியில் ஈடுபட்டால் தமிழ்நாடும் நலம்பெறும்; தமிழ் இனமும் உயரும்; இந்திய நாட்டின் ஒற்றுமையும் காப்பாற்றப்படும்.

— அடிகளார்

நஞ்சினையும் மாற்றும் நல்லாற்றல் தூய செங்குருதிக்கு உண்டு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புறத்துறையில் புரட்சி செய்தவர்கள் ஏராளம்; ஆனால் அகப்புரட்சி செய்தவர்கள் மிகச்சிலரே யாவர். அந்த அகப்புரட்சியும் கூட ஆற்றொழுக்காக இல்லாமல் இடை யிடையே தடைப்பட்டுத் தளர்வுற்று வந்திருக்கிறது. மனிதன் அகவளர்ச்சியில் தேய்ந்து கொண்டே வந்திருக்கிறான். மனிதன் வாழத்தானே புதிய புதிய சாதனங்கள் எல்லாம் என்பதை அவன் எண்ணிப்பார்க்கக்கூட மறந்து விட்டான்.

குடிப்பிறப்புச் சிறப்பு மனிதனுக்கு இன்றியமையாதது. திருவள்ளுவர், அப்பரடிகள் ஆகியோரின் குடிப்பிறப்புச் சிறப்பு இன்று நம்மிடம் இருக்கிறதா?

'நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப்படும்'

என்று வீட்டுக்குள்ளே அடங்கிக் கிடப்பவனைப் பார்த்து- குடும்ப வாழ்க்கையில் செழுமை யில்லாதிருப்பவனைப் பார்த்துப் பேசினார்.

'உலகத்தோடு ஒத்துவாழு; ஒதுங்கி வாழாதே' என்று பேசுகிறார் திருவள்ளுவர். நீ சென்று குடியேறிய நாட்டை உன்நாடாக எண்ணிப் போற்று; அதனை உன்நாடாகவே ஆக்கிக்கொள் அந்நாட்டை உன்நாடாக ஆக்கிக் கொள்ள அந்நாட்டு மொழிகளையெல்லாம் கற்றுக்கொள் என்றார். உலகத்தை உன்னிடத்தே இழுக்க முயற்சிக்காதே உலகம் தங்கும் இடத்தில் நீ தங்கிவிடு என்கிறார். வள்ளுவம் அருமையான தொரு வாழ்க்கை இலக்கியம்.

இன்று உலகச் சந்தையில் அந்நியர் கருத்துக்கள் வந்து மலிந்து கிடக்கின்றன. அவற்றின் தோற்றத்தையோ, கவர்ச்சியையோ கண்டு ஏமாறாமல், 'மெய்ப்பொருளைக் கண்டு பயன் பெற வேண்டும்.

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு'

என்றும்.

'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு'

என்றும் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்,

இலட்சம் செங்கல் கொட்டிக்கிடந்தாலும் அது கட்டிடமாவதில்லை. அவற்றை அடுக்கிச் சந்து பதிந்துதான் சுவரை எழுப்பவேண்டும்.

தமிழகம் பத்திரிகை பற்றிய அறிக்கை

(நமூனா IV 8-ம் சட்டப் பிரிவுப்படி)

வெளியிடும் இடம்:	அடிகளார் அச்சகம் குன்றக்குடி இராமநாதபுர மாவட்டம்
வெளிவரும் காலம்:	வாரந்தோறும்
அச்சிடுபவர்:	பி. எஸ். இராமசாமி அய்யர்
இனம்:	இந்தியர்
முகவரி:	கிழக்கு,ரதவீதி குன்றக்குடி இராமநாதபுர மாவட்டம்
வெளியிடுவோர்:	ஆறு. சுப்பிரமணியன்
ஆசிரியர்:	ஆறு. சுப்பிரமணியன்
உரிமையாளர்:	ஆறு. சுப்பிரமணியன்
இனம்:	இந்தியர்
முகவரி:	குன்றக்குடி இராமநாதபுர மாவட்டம்

ஆறு சுப்பிரமணியன் ஆகிய நான் மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்று உறுதியாய் அறிவிக்கிறேன்.

(ஒம்) ஆறு. சுப்பிரமணியன்
வெளியிடுவோர்

திருவள்ளுவர் அப்பரடிகளின் குடிப்பிறப்புச் சிறப்பு இன்று நம்மிடம் இருக்கிறதா?

உடைந்த செங்கலையும் முழுச் செங்கலையும் இணைத்து இடைவெளி ஏற்பட்ட இடத்தில் முழுச் செங்கலையும் கூட உடைத்துப் போட்டுச் சந்து நிரப்புவது போல, மனிதனும் தனது சொந்த மதிப்பையும் சுகத்தையும் குறைத்துக் கொண்டாவது சமுதாயச் சுவரை எழுப்ப முற்பட வேண்டும். உடைந்த செங்கலையும் முழுச் செங்கலையும் இணைத்துச் சுவரை எழுப்புபவர் கொத்தனர்; சமுதாயத்தில் உள்ள வலிமையுடைய வனையும் வலிமையற்றவனையும் இணைத்து ஒருசேர அழைத்துச் செல்லுபவரே சமுதாயத் தலைவராவர்.

சோஷியல் (Social) என்ற ஆங்கிலப் பதமே விருப்பு வெறுப்புக்களைக் கடந்து உள்ளம் ஒன்றியப் பழகும் பண்பைக்குறிப்பது. இதைத் தான் திருவள்ளுவர் 'ஒப்புரவு' என்று குறிப்பிடுகிறார். மற்றவர்களோடு சேர்ந்து பழகும் போது அப்படிச் சேர்ந்து பழகுவதனால் ஏதேனும் கேடுகள் விளையுமானாலும் அவற்றையும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்' என்கிறார் வள்ளுவர். ஒத்தது அறிதல் என்பதற்குப் பொருள் மற்றவர்களுக்கும் ஒத்ததறிந்து என்பதேயாகும். அப்படி மற்றவர்க்கும் ஒத்த தறிந்து வாழ்பவனே உயிர் வாழ்பவன்.

பழகிய நண்பரிடத்துக் குற்றம் கண்டவிடத்தும் பொறுத்துக்கொள் என்கிறார் திருவள்ளுவர். மனிதனையும் மாமனிதனையும் இணைத்துச் சமுதாயக் கட்டிடத்தை எழுப்ப இந்தப் பொறுமைப் பண்பு இன்றியமையாதது.

சமயம் கடவுள் நம்பிக்கை ஆகியவற்றில் மிகத் தெளிவான கருத்துடையவர் திருவள்ளுவர். வீடுபற்றி அவர் பேசிய அளவிற்கு வேறு யாரும் பேசியதில்லை.

'புக்கில் அமைந்தின்று
கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு'

என்ற குறட்பாவின் மூலம் திருவள்ளுவர் வீடுபேற்றின் மேன்மையை விளக்கியிருக்கிறார்.

நாகரிகம் என்பதற்கே புதியதொரு விளக்கம் தந்தவர் திருவள்ளுவர். நண்பர் ஒருவர் நஞ்சு கலந்த பாலைக் கொடுத்தாலும் அதை வாங்கிக் குடித்துவிடு—நஞ்சு கலந்தது என்று நினைக்காமல் குடித்துவிடு என்று கூறுகிறார். நஞ்சுகலந்ததுஎன்றுநாம் நினைத்தால் நமது முகத்தில் மரணக்குறிபடரும்; நஞ்சு கலந்தது என்பதை நாம் அறிந்து கொண்டோம் என்பதை அந்த நஞ்சு வைத்த நண்பர் உணர்ந்தால் அவர் வருந்துவார். அந்த வருத்தத்தைக்கூட அவருக்குக் கொடுக்கக் கூடாது என்கிறார். நஞ்சு என்று நினைக்காமல் குடித்தால் அது நம்மைக் கொன்று விடாது; நஞ்சையும் மாற்றும் வல்லமை தூய செங்குருதிக்கு உண்டு. சாக்ரடீசுக்கு நஞ்சு கொடுத்தார்கள். அவர் நஞ்சு என்று தெரிந்து—நஞ்சைச் சாப்பிடுகிறேன் என்று அறிந்து அதைச் சாப்பிட்டார்; செத்துப்போனார். அப்பரடிகளுக்கும் நஞ்சு கொடுக்கப்பட்டது. அந்த நஞ்சை அப்பரடிகள் உண்டும் சாகவில்லை.

'பெயக்கண்டும் நஞ்சுண்டு
அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

என்று நயத்தக்க நாகரிகம் பேசிய வள்ளுவர் பிறந்த நாடு அன்றோ நமது நாடு? எனவே நஞ்சினையுண்டும் வாழ்ந்தார் நமது ஞானத் தலைவர் அப்பரடிகள்.

மனிதன் ஒரு சொறிசிறங்கு பிடித்தவன்போல; அரிப்பு ஏற்பட்டபோது சொரிந்து கொள்வான்; சொரியும் போது சுகமாக இருக்கும். பின்னர் எரிச்சல் ஏற்படும். அவ்வாறு எரிவெடுத்ததும் இனிமேல் சொரியக் கூடாது என்று தனக்குள் எண்ணிக் கொள்வான். பின்னர் ஊரல் ஏற்படும் போது அதை மறந்து சொரிய ஆரம்பித்து விடுவான். அதுபோலவே பலர் அன்பு, அருள் என்று படிக்கும் போது அன்பும் அருளும் காக்க வேண்டும் என்று எண்ணிக் கொள்வார்கள்; அடுத்த நேரமே அவற்றை மறந்து விடுவார்கள். இத்தகைய பண்பு வாழும் மனித சமுதாயத்திற்கு நல்லதல்ல. நாம் கற்க வேண்டும்; கற்ற நெறியில் நிற்கவேண்டும். வாழ்க்கையில் வழுக்கலும், இழுக்கலும் ஏற்படும் போது ஊன்றுகோல் போல நின்று உதவுவது திருக்குறள். வீட்டிலும், நாட்டிலும் குறள் மணம் கமழ வேண்டும்; குறள் வாழ்வு மிளிர வேண்டும்.

வாழ்விக்க வந்தோர் வரலாறு

'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பது சித்தாந்தக் கொள்கை; திருத்தொண்டர்கள் அனைவரும் இக்கொள்கை வழி நின்று சிவத்தொண்டு புரிந்தவர்கள். அவர்களில் பங்குனி 17-ல் நேசனார் திருநாளும், 19-ல் கணநாதர் திருநாளும், 21-ல் முனையடுவார் திருநாளும் வருகின்றன. அம்மூவரின் வரலாறும் இவ்வாரம் இடம் பெறுகிறது. அவர்தம் திருநாட்களில் அவர்தம் தொண்டுகளை நாம் நினைவுகூர்வோமாக.

-துணை ஆசிரியர்.

12 நேசனார்

கார் வளர் சிகர மாடக் காம்பீலி நகரிலே அறுவையர் குலத்திலே தோன்றியவர் நேச நாயனார். அவர் சிவனடியையே மனத்தால் சிந்தித்தார்; அவரது திருவாய் எப்போதும் திருவைந்தெழுத்தையே ஓதிற்று. பாங்குறும் ஆடையும், பழுதில் கோவணமும் நெய்து சிவனடியார்கட்கு உதவுவதையே தொழிலாகக் கொண்டார். இவ்வாறு மனத்தாலும், வாக்காலும், உடலினாலும் இத்திருத்தொண்டுகளைச் சிறப்புறச் செய்து, சிவனடி சேர்ந்தார் நேசநாயனார்.

13 கணநாதர்

'கந்தமலி வயற்காழி மறையோர் ஏத்தும் கணநாதர்' சோழ நாட்டிலே, திருஞான சம்பந்தர் அவதரித்த சீர்காழியில் தோன்றிய வேதியர்; அவர் நல்லறமாம் இல்லறத்தில் நின்று, திருத்தோணிப் பெருமானார்க்கு நாள்தோறும் அன்போடு தொண்டு செய்தார். நல்ல நந்தவனப்பணி செய்வோர், நறுமலர் கொய்வோர், மலர்மாலை கட்டுவோர் திருமஞ்சனப் பணிபுரிவோர், அலகிட்டுத் திருமெழுக்கிடுவோர், திருவிளக்கெரிப்போர், திருமுறை எழுதுவோர்—படிப்போர் ஆகிய பல்வேறு தொண்டர்களுக்கும் ஏதேனும்குறைகள் தேர்ந்தால் அவற்றை நீக்குவார்; ஆன இத் திருதொண்டில் பலரையும் ஈடுபடுத்தி அவர்களைத் தொண்டர்களாக்குவார்.

தொண்டர்களைத் தயார் செய்யும் நிறுவனமாகத் திகழ்ந்த அடியார் வழியில் நாமும் பல சிவ நெறித்தொண்டர்களைத்தயார்செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டாமா?

இத்தகு பெருஞ் சிறப்பு வாய்ந்த கணநாதர், இந்தத் திருத்தொண்டுகளோடு, மெய்ப்பெருந்திருவாம் திருஞான சம்பந்தரை மேவுநல் அன்பொடு முப்பெரும் பொழுதும் வழிபட்டுவந்தார். இதனால் அவர், சுடர் நெடுங் கயிலையினை அடைந்து சிவ கணங்களுக்குத் தலைவரானார்.

14 முனையடுவார்

பொன்னி வளங்கொழித்துப் பொழில் சூழ்ந்த புகழ் நீடூரில் வேளாளர் மரபிலே தோன்றியவர் முனையடுவார்; சிவன் கழலை மறந்தறியாச் சீலர் அவர். போர்க்களத்திலே நின்று, மாற்றாரைப் புறங்காணச் செய்யும் பொற்புடையார். இதனாலேயே அவருக்கு முனையடுவார் என்ற திருப்பெயர் வந்தது என்பர்.

மாற்றலர் பால் தோற்றவர்கள் முனையடுவாரை நாடி, அவர்தம் உதவியை வேண்டி நிற்பர். முனையடுவாரும் அவர் பொருட்டுப் போர் முனை சென்று, அடுபோர் புரிந்து வெற்றிபெறுவார்; அவ்வெற்றியில் பெற்ற பொருளைக் கொண்டு, சிவனடியார்களுக்குத் திருவமுதூட்டுவார்; அவர்கள் வேண்டும் உதவிகளைப் புரிவார். 'யாவர் எனினும் இகலழித்து, ஈசன் அடியார் தமக்கின்பம் மேவ அளிக்கும்' இத் திருத்தொண்டினைப் பன்னெடு நாள் செய்து, அன் பின் செந்நெறி நின்று சிவன் திருக் கழலினைச் சேர்ந்தார் முனையடுவார்.



—அடிகளார்—

கேள்வி

தமிழகத்திலேயே தங்களுக்குப் பிடித்தமான அரசியல் கட்சி எது? ஏன்?

பதில்

சந்தேகமென்ன? இந்திய தேசீய காங்கிரஸ் கட்சிதான். இந்திய சுதந்திரத்திற்காகப் போராடி நாம் அனைவருக்கும் விடுதலையுரிமை வாங்கித் தந்ததும் இன்று சோஷலிச சமுதாய அமைப்பை நோக்கி நம்மை அழைத்துச் செல்வதும் அந்த ஒரு கட்சிதானே!

கேள்வி;

சில அரசியல் வாதிகள் தற்போதைய அரசை (சர்க்காரை) 14 காரட் சர்க்கார் என வர்ணித்து, இந்த சர்க்கார் விரைவிலேயே வீட்டிற்குச் சென்று விடும் என்கிறார்களே இது பற்றித் தாங்கள் கருத்தென்ன?

பதில்:

எப்படியாவது மககளைத் தங்கள் வலையில் விழவைக்கலாமென்ற முயற்சியேயாகும். ஆனால் நிச்சயமாக தோல்வியே அடைவார்கள்.

கேள்வி;

ஆச்சாரியார், ,தம்மிடம் ஆறு மாதம் அரசாங்கத்தை ஒப்படைத்தால் வரியே இல்லாத ஒரு சொர்க்க பூமியை உண்டாக்கிக் காட்டுவதாகக் கூறியுள்ளாரே அதுபற்றிய தாங்கள் கருத்தென்ன?

பதில்:

கனவிலா, கற்பனையிலா?

கேள்வி:

பிரிவினைத்தடைச் சட்டத்தை எதிர்த்துச் சிறைக்குப் போவேன் என்று சூளுரைக்கும் பெரியார் அவர்கள் நடத்தவிருக்கும் பாதுகாப்பு மாநாட்டில் தாங்கள் கலந்து கொள்வீர்களா? இந்தப் பிரச்சினையில் பெரியாரிடம் தாங்கள் எந்த அளவுக்கு உடன்பாடு காணுகிறீர்கள்?

பதில்:

நமக்குப் பிரிவினைக் கொள்கை உடன்பாடுடையதல்ல; அவர் பிரிவினை மாநாடு நடத்தினால் நாம் ஒருமைப்பாடு மாநாடு நடத்துவோம்.

கேள்வி:

தற்போதைய நிலையில் இடைத்தேர்தல்கள் நடத்தப்படுவது பற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்:

தவிர்த்திருந்தால் நல்லது.

கேள்வி:

மதுரை விவேகானந்தர் விழாவில் தாங்கள் பெரியார் பற்றிக் குறிப்பிட்டதாக வந்த செய்திகளில் எந்த அளவுக்கு உண்மை இருந்தது என்பதை விளக்க முடியும்?

பதில்:

செய்தி முழுவதும் உண்மைதான். பொது வாழ்வில் கருத்து வேறுபாடு தவிர்க்க முடியாதது. அதுமட்டுமல்ல; ஆரோக்கியத்திற்கு அது இன்றியமையாதது என்பதும் நமது கருத்து.

கேள்வி:

தோழர் குருசாமி பெரியார் அவர்களிடமிருந்து பிரிந்து, சுயமரியாதை இயக்கம் என்ற பெயரால் நடத்திவரும் பிரச்சாரம் பற்றித் தங்கள் கருததென்ன?

பதில்:

பிரச்சாரம் நடத்துவதைக் குறித்து நமக்கு எந்தவிதமான கருத்துவேறுபாடும் இல்லை. ஆனாலும் திராவிடக் கழகத்தில் ஏற்பட்ட பிளவு இன்றையச் சூழ் நிலையில் அவ்வளவு நல்லதல்ல என்பதே நம் கருத்து. பிளவுக்குக் காரணம் யார் என்று, அறிந்து ஆராய நாம் ஆசைப்படவில்லை. எப்படியும், ஓர் அமைப்பில் பிளவு ஏற்படுமானால், அதற்குரிய காரணங்கள் அனைத்தும் ஒரு பக்கமே சார்ந்திருக்கும் என்ற நம்பிக்கை நமக்குக் கிடையாது. சென்றது போக, பிரச்சார முறையில் இன ஒருமைப் பாடு குலையும் வண்ணம் தமக்குள் பகையை வளர்த்துக் கொள்ளாமல் அவரவர் அவரவர் வழியில் இலட்சியத்தை நோக்கி நடைபயில்வது சிறந்ததாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்று நம்புகிறோம்.

கேள்வி

ஆகம நெறி தமிழர் நெறியா?

பதில்

ஆம். வடமொழியில் ஆகம நூல்கள் இருப்பதால் அதை வடவர் நெறி என்று பலர் கருதுகிறார்கள். ஆனாலும், வடமொழி மரபுக்கும், ஆகமத்தில் கூறப்படும் கருத்துக்களுக்கும் எத்தகைய உறவும் இல்லை. தமிழர்களின் வழிவழித் தோன்றிய கருத்துக்களே ஆகமக் கருத்துக்கள். மறைவாகக் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கருத்தினாலும், வடமொழி தூய்மையானது என்ற கருத்தின் அடிப்படையிலும், வடமொழியில் எழுதிவைத்தார்களே தவிர, ஆகமங்கள் தமிழர்களுடையனவேயாம்.

கேள்வி

'அருள்' என்ற பெரும் பதத்தின் மெய்ப் பொருள் என்ன?

பதில்

அன்பின் முதிர்ந்த வளர்ச்சியே அருள் என்று கூறப்படும். திருவள்ளுவர் 'அருள் என்னும் அன்பீன் குழவி' என்று பேசுகிறார். அன்பு என்பது, தொடர்புடையார் மாட்டு நிகழ்வது. மேலும் பெருவழக்கில் தன்னலச் சார்பினதாகவும் இருக்க இடமுண்டு. அருள் என்பது தொடர்பில்லாதவர் மாட்டும் காட்டுவது; தன்னல நோக்கில்லாதது.

மனிதர்கள், பெரும்பாலும் அன்பிலே வளர்வதே அருமையிலும் அருமை. அங்ஙனமிருக்க அவர்கள் மாட்டு அருளுணர்வு இருப்பது அதனினும் அருமையாகும்.. ஆதலாலேயே, இறைவன் உயிர்கள் மாட்டுக் காட்டும் அன்பினை அருள்என்று வழங்குவது மரபு. காரணம், இறைவனின் தண்ணருள் எவ்வித எல்லைக்கும் தொடர்புகளுக்கும் உட்படாதது. உயிர்கள் நலம் பெறும் பொருட்டே இறைவன் அன்பு காட்டுகிறான். அதனால் அருள் என்ற வழக்கு இறைவனின் தண்ணருளையே குறிக்கும்.

கேள்வி

எத்தகைய சமுதாயத்தைத் தாங்கள் விரும்புகிறீர்கள்?

பதில்

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் பெற்று இன்ப அன்பிலே கூடிக் கலந்து வாழ்கின்ற அருள்வழிப்பட்ட சமுதாயத்தையே நாம் விரும்புகிறோம்.

கேள்வி

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில், சேர்க்கைக்கு இலஞ்சம் வாங்குவதாகச் சட்டசபையில் புகார்வந்ததே, தங்கள்பள்ளியில் வாங்குவதுண்டா?

பதில்

நாமும் செய்தியைப் பார்த்தோம். நம்முடைய பள்ளியைப் பொறுத்தவரையில் மாணவ சேர்க்கைக்கும், நன்கொடைக்கும் எந்தவிதமான தொடர்பும் நிர்ப்பந்தமும்இல்லை. நம்முடைய சமுதாய நல வேலைகளைப் பார்த்து அவற்றை ஊக்குவிக்க வேண்டுமென்ற எண்ணமுடைய சிலர் நன்கொடை கொடுப்பது உண்மை. பெரும்பாலும் நம்முடைய பள்ளியில் பல இடங்களை, சமுதாயத்தில் பின் தங்கியவர்களும் சிபாரிசு பெற்று வருகிறவர்களுமே பெறுகிறார்கள் மேலும் அதற்கென நிறுவப்பெற்ற பொறுப்புக் குழுவினரே இருந்து, மாணவியரைத் தேர்ந்தெடுக்கின்றனர். அப்படித் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கு மாணவியரின் தகுதியும், திறமையும் பரிசீலனை செய்யப்பெறுகின்றன.

செய்திச் சுருள்

நீலகிரி மாவட்ட அ. நெ. திருக்கூட்ட பேரவைக் கூட்டம்

நீலகிரி மாவட்ட அருள் நெறித் திருக்கூட்ட இரண்டாவது பேரவைக் கூட்டம் குன்னூர் ஸ்ரீ விநாயகர் தேவஸ்தானத்தில் 10-3-63ல் அருள் நெறித் தந்தை தவத் திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருள்நெறி அன்பர்களும் ஏராளமான பொது மக்களும், மாணவ மாணவிகளும் திரளாகக் கூடி அருள் நெறித் தந்தை அவர்களை விநாயகர் தேவஸ்தானத்திற்கு ஊர்வலமாக அழைத்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. திரு. எஸ். முருகேசன் ஆண்டறிக்கையைப் படித்தார்.

அருள் நெறித் தந்தை அவர்கள் தமது தலைமையுரையில், குறைவிலா நிறைவாக இருக்கின்ற இறைவனின் பேருளைப் பெற்று, நிறைவுடைய வாழ்வு வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

கோவை கல்லூரி முதல்வர் திரு இராசாக்கண்ணு 'அருள் நெறி' என்பது பற்றியும், கோவை மாவட்ட அருள் நெறித் திருக்கூட்டத் தலைவர். பேரூர் தவத்திரு இராமசாமி அடிகள் தென்னாட்டுத் திருமடங்கள் என்பது பற்றியும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர். நன்றி கூறலுடன் பேரவைக் கூட்டம் நிறைவெய்தியது.

நஞ்சன் கோடு உயர்நிலைப் பள்ளி

நஞ்சன்கோடு உயர்நிலைப் பள்ளி மாணவ இலக்கிய மன்றக் கூட்டம் 11-3-63ல் நடைபெற்றது. புலவர் முனுசாமி வரவேற்புரை கூறினார் அருள் நெறித் தந்தை அவர்கள் பேசுகையில் மனித சமுதாயம் காலவளர்ச்சிக்கேற்ப வாழ்க்கைப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும், வாழ்க்கையின் பதிவேடு தான் இலக்கியம் என்றும் குறிப்பிட்டார்கள்.

குந்தாமஞ்சூர் பொதுக்கூட்டம்

குந்தாமஞ்சூரில் அருள் நெறித் தந்தை அவர்களை ஒரு ஜீப் காரில் ஊர்வலமாக அழைத்து வந்தனர். பின்னர் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு தவத் திரு. இராமசாமி அடிகள் தலைமைவகித்தார்கள். அருள் நெறித் தந்தை அவர்கள் பேசுகையில், நிலத்தைப் பண்படுத்தி, எருவிட்டு நீர்பாய்ச்சினாலும் விதை போடாவிட்டால் எப்படிப் பயன் கிடைக்காதோ, அதுபோல, மனித வாழ்க்கையில் எல்லா நலன்களும் இருந்தாலும் பக்தி என்ற கடவுள் நம்பிக்கை இல்லையென்றால் வாழ்வின் பயனை அனுபவிக்க முடியாது என்று குறிப்பிட்டார்கள்.

மேலூர் ஆரக்கச்சி உயர்நிலைப் பள்ளி

மேலூர் ஆரக்கச்சி உயர் நிலைப் பள்ளி மைதானத்தில் திரு. என். ஜோகய்யா தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தவத்திரு இராமசாமி அடிகள் பேசுகையில், திருமடத்தின் தலைவர்களைக் காண வேண்டுமென்றால் அவர்கள் இருக்குமிடத்திற்கு நாம் சென்று, அவர்களது சௌகரியம் பார்த்து அதன் பிறகும் அவர்கள் மனம் வைத்தால் தான் பார்க்க முடியும். அருள் நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களோ நம்மைத் தேடிவந்து, நாட்டுமக்களை நல்வழிப்படுத்தும் திருப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்று பாராட்டினார். பின்னர், மேலூர் ஆரக்கச்சி ஊராட்சி மன்றத் தலைவர் பேசினார். பிறகு நீண்ட கைதட்டலுக்கிடையே அருள்நெறித் தந்தை அவர்கள் எழுந்து பேசுகையில், அறிவு சொக்கத் தங்கம் போன்றது; தங்கம் மண்ணிலே கலந்து நிற்கிறது; மண்ணை நீக்கிச் சொக்கத் தங்கத்தைக் காண்பது போல அறியாமையிருளைப் போக்கி அறிவைப் பெற வேண்டும் என்றார்கள். (முழுப் பேச்சு பின்னர் வரும்)

கன்னேரி மந்தனை பொதுக்கூட்டம்

கன்னேரி மந்தனை மாரியம்மன் கோயிலுக்கு முன்புறமுள்ள திடலில் திரு. கே. நஞ்சா மேஸ்திரி தலைமையில் 12-3-6‹ல் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அருள் நெறித் தந்தை அவர்கள் பேசுகையில், குழந்தைக்கு நோய்வந்தால் தாய் மருந்து குடித்துப் பத்தியம் இருப்பதுபோல, நமது உயிருக்கு ஏற்படும் துன்பங்களுக்கு—நோய்களுக்கு தாயினும் சாலப்பரிந்தூட்டும் தயாபரனாகிய இறைவன் மருந்துண்டு பத்தியம் இருக்கிறான் என்றார்கள்.

உதகை சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

உதகை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தின் சார்பில் தவத்திரு இராமசாமி அடிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அருள் நெறித் தந்தை அவர்கள் பேசுகையில், 'என்றைக்குச் சராசரி மனிதனின் வாழ்க்கையைப் பற்றி மதம் அக்கறை கொள்ளத் தலைப் படுகிறதோ அன்றுதான் மதம் வாழும்' என்று கூறினார்கள். (முழுப் பேச்சு பின்னர் வரும்)

கொப்பனுபட்டி நாராயணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளி

கொப்பனுபட்டி மு. ப. மு நாராயணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விழாவும், நிறுவியவர் நாளும் 13-3-63ல் நடைபெற்றது. விழாவிற்கு அருள் நெறித் தந்தை அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், மாணவர்கள் தம் வாழ்க்கையைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றும், விருப்பு வெறுப்புக்களுக்கு ஆளாகாமல், எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். தொடக்கத்தில் தலைமை ஆசிரியர் திரு. ரெ. ஞானவேலு வரவேற்புரை கூறினார்.

தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்கள் சங்கம்

தமிழகத்திலுள்ள தனித் தமிழ்க் கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள் ஆகியோரை உறுப்பினராய்க் கொண்ட சங்கம் ஒன்று விரைவில் தொடங்கப்பெறும். இச் சங்கம் தமிழ் வளர்ச்சி, தனித் தமிழ்க் கல்லூரிகளின் முன்னேற்றம், தனித் தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களின் நலன் ஆகியன குறித்துச் செயலாற்றும்.

இதற்கான அமைப்புக் கூட்டம் 10-3-63-ல் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் கூட்டப்பட்டது, கூட்டத்தில் பேரூர், மதுரை, தருமபுரம், மேலைச்சிவபுரி ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகள் கலந்து கொண்டன. மற்ற கல்லூரிகள் கடிதத்தின் மூலம் ஒப்புதல் தெரிவித்துள்ளன.

வரும் சித்திரை மாதத்தில் சங்கம் தொடங்கப்பெறுவதற்கான ஏற்பாடுகளை தவத்திரு இராமசாமி அடிகளாரவர்கள் செய்து வருகின்றார்.

தேவாரப் பொன்மொழிகள்

ஊனத்து இருள் நீங்கிட வேண்டில்
ஞானப் பொருள் கொண்டு அடிபேணும்

சித்தமது ஒன்றிச் செய்கழல் உன்னிச்
சிவனென்று நித்தலும் ஏத்தத்
தொல்வினை நம்மேல் நில்லாவே

அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை

ஊனையே கழிக்க வேண்டில்
உணர்மின்கள் உள்ளத் துள்ளே

கட்டரராய் நின்று நீங்கள்
காலத்தைக் கழிக்க வேண்டாம்

என்கடன் பணிசெய்து கிடப்பதே

உமையொரு பாகனை ஓமம் செய்து
உணர்மின்கள் உள்ளத்தால்

அடிகளார் சுற்றுப்பயணம்

மார்ச் 1963.

24 திருப்புவனம்
25 மகாதேவபட்டணம்
26 ஈரோடு
27 சென்னை
29 சிங்கம்புணரி
31 சிக்கல்


வீரமாகாளியம்மன் பூச்சொறியல் விழா

குன்றக்குடி வீரமாகாளியம்மன் பூச்சொறியல் விழா 15-3-63-ல் சிறப்பாக நடைபெற்றது. விழாவையொட்டி வீரமாகாளியம்மனுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இரவு, திருக்கோளக்குடி நாதஸ்வர இன்னிசையும், இசைத்தென்றல் எம். எம். மாரியப்பா குழுவினரின் 'வள்ளி திருமணம்' நாடகமும் சிறப்பாக நடைபெற்றன. நாடகத்தைப் பெருந்திரளான மக்கள் கூடியிருந்து பார்த்து மகிழ்ந்தனர்.

அருள்நெறிக் கழக ஆண்டுவிழா

மதுரை அருள்நெறிக் கழகத்தின் ஆண்டுவிழா புட்டுத்தோப்புத் தெருவில் திரு. எம். பி. எம். முனிசாமி தேவர் தலைமையில் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் பேசுகையில், பகைவர்களையும் நேசிப்பதுதான் அன்பு என்றார்கள். திரு. தங்க கருப்ப நாடார். அனைவரையும் வரவேற்றார், திரு ராமலிங்க ராஜ் கொடியேற்றினார்.

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 18-3-63



பசிபோக்குவாய்

‘பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்’ என்பது தமிழ் இலக்கியம். பசிப்பிணியின் கொடுமையைத் தமிழிலக்கியங்கள் பரவலாகப் பேசுகின்றன. மக்களின் பசிப்பிணியைப் போக்குவதுதான் முதற் பெரும்பணியாக இருத்தல் வேண்டும். பசியால் துடிக்கும் மக்களிடத்திலே பரமன் புகழ்பாடுவது அத்துணைப் பயன் தரும் என்று கருத முடியாது. இதையுணர்ந்தே அண்மைக் காலத்தில் வாழ்ந்த தேசத் தந்தை காந்தியடிகள், ‘பசித்த மக்கள் முன்னே பரமன் ரொட்டித் துண்டாக வர வேண்டும்’ என்றார். நமது சமய ஞானிகளாகக் கருதப் பெறுகிற சுந்தரரும் சம்பந்தரும் கூட ‘பசியால் வாடுகிற பக்தர்களின் பசிப்பிணி தீர்க்க வேண்டும்’ என்று பரமனிடத்திலேயே சென்று முறையிட்டிருக்கிறார்கள்.

‘பாடுவார் பசிதீர்ப்பாய்’

என்று வேண்டுகிறார் சுந்தரர். சம்பந்தரோ,

“இறைவா! நின் தொண்டர்கள் வந்து உன்னை வணங்கித்தொழுது தூமலர் தூவி நின்று. நன் மலரடிகளை ஏத்திப் பணிகின்றனர். அவர்கள் எல்லாம் பசியால் வருந்துகின்றனர்; அவர்கள் பசியைப் போக்கி நீ அருள் புரியாத தென்ன? என்று கேட்கிறார். இறைவனை நோக்கி அவர் கேட்பதைப் பாருங்கள்;

‘தொழுது வந்து
வணங்கி மாமலர்
தூவி நின்றுஅடி
ஏத்துவர் அவர்
உண்டியால் வருந்த
அருளாதது என்கொலாம்’

அடிகளார் உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா

குன்றக்குடி அடிகளார் உயர்நிலைப் பள்ளியின் 4வது ஆண்டு விழாவும், இலக்கிய மன்ற ஆண்டு விழாவும் 22--3—63 மாலை 4 மணி அளவில் காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு. எஸ். காளி நாடார் தலைமையில் நடைபெறும். வித்துவான் திரு. ந. வெங்கட்ராமன் ‘அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். அருள் நெறித் தந்தை தவத்திரு அடிகளார் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள்.

★

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.